# சென்னை கிழக்கு மாவட்டம் நடத்திய பவள விழா – முப்பெரும் எழுச்சி விழா!

## கழக முன்னோடிகளுக்குப் பொற்கிழி – புத்தாடை வழங்கி அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்பித்தார்!



முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி கழக இளைஞரணி செயலாளரும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.09.2024) சென்னை, ராஜா அண்ணாமலை மன்றத்தில் சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பவளவிழா ஆண்டின் முப்பெரும் விழாவில் கழகத்திற்கு பணியாற்றிய 75 வயதைக் கடந்த 75 மூத்த முன்னோடிகளுக்கு கலைஞர் நூற்றாண்டு நினைவு நாணய பொற்கிழியோடு, கேடயம், புத்தாடை, இயக்கப் பணிகள் அடங்கிய சான்றிதழ் வழங்கி, பொன்னாடை அணிவித்தார். விழாவிற்கு பொற்கிழி, பாராட்டுப் பெற்றவர்களின் உறவினர்களும் அழைக்கப்பட்டனர். மேலும் 60 வயதைக் கடந்த கழக முன்னோடிகள் 1000 பேருக்கு பொற்கிழி – புத்தாடைகளை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். விழாவிற்கு வந்த அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு கழகத் தொண்டர்கள், இஸ்லாமியர்கள், கிருஸ்துவர்கள், அர்ச்சகர்கள், வடஇந்திய தொழிலாளர்கள், ஆட்டோ ஓட்டுநர்கள், வழக்கறிஞர்கள், விளையாட்டு வீரர்கள் என பல தரப்பினரும் திரண்டு சிறப்பான வரவேற்பளித்தனர். இந்நிகழ்ச்சியில் சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி.ஆர்.பிரியா ராஜன், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல், முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு வாரியத் தலைவருமான ப.ரங்கநாதன், மண்டல குழு தலைவர்கள், பகுதி கழக செயலாளர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.


